

கழகத் தலைவர் – முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களிடம் அண்ணா நகர் சட்டமன்ற உறுப்பினர் எம்.கே.மோகன் தமது பிறந்தநாளையொட்டி சந்தித்து வாழ்த்து பெற்றார்.

## ஒரே நாளில் 2வது முறையாக தங்கம் விலை குறைந்தது!

சென்னை,மே.13-

சென்னையில் ஒரே நாளில் தங்கம் விலை இரண்டு முறை அதிரடியாகக் குறைந்துள்ளது.

சென்னையில் நேற்று காலை வர்த்தகமாகியதும் ஒரு கிராம் தங்கம் விலை ரூ.8,880-க்கு விற்பனை செய்யப்பட்டது. ஒரு சவரன் ரூ.71,040-க்கு விற்பனையானது. நேற்றைய விலையை விட நேற்று காலையில் ஒரு கிராம் 165-க்கும், ஒரு சவரன் ரூ.1,320 குறைந்துள்ளது.

ஆபரணத் தங்கத்தின் விலை ஒரே நாளில் சவரனுக்கு ரூ.2,360 குறைந்துள்ளது. காலையில் ரூ.1,320 குறைந்த தங்கம் விலை தற்போது மேலும் ரூ.1,040 குறைந்துள்ளது. சென்னையில் ஒரு சவரன் தங்கம் ரூ.70,000க்கும், ஒரு கிராம் ரூ.8,750க்கும் விற்பனை செய்யப்படுகிறது.

கடந்த வாரம் ஒரே நாளில் 2 முறை உயர்ந்த தங்கம், வாரத்தின் முதல் நாளான நேற்று இரண்டாவது முறையாக ஒரே நாளில் தங்கம் விலை குறைந்துள்ளது மக்களிடையே மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (12.5.2025) சென்னை தரமணியில் செயல்பட்டு வரும் செய்தி மக்கள் தொடர்புத் துறையின் "தமிழரசு அலுவலகத்தில் "தமிழரசு இதழ் அச்சிடும் பணிகளை நேரில் பார்வையிட்டார். இந்நிகழ்வில் அமைச்சர் மு.பெ. சாமிநாதன், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி. ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.அரவிந்த் ரமேஷ், ஏ.எம்.வி.பிரபாகர ராஜா, க.கணபதி, ஜே.எம்.எச்.ஹசன் மௌலானா, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் வே. ராஜாராமன், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு. இரா. வைத்திநாதன், , கூடுதல் இயக்குநர் ச. செல்வராஜ், மாமன்ற உறுப்பினர்கள் உள்பட செய்தி மக்கள் தொடர்புத் துறை அலுவலர்கள் உடனிருந்தனர்.





